DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 136/ 2021 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 1 |
| Name | திரு. பிரதாப் |
| Husband Name | முருகன் |
| Village | கிளாக்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 24 |

**(2,4ம் எதிரி ஆஜர் – 1,3 எதிரிகள் ஆஜரில்லை: 1,3 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 31-07-2026.(நேரம்:01.00) (Crmp No.292/2026 என்ற மனு நடவடிக்கையில் இந்த நீதிமன்றம் பிறப்பித்த அனுமதி உத்தரவின் பேரில் சாட்சி மீள அழைக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்)**

**குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடைபெற்றது தொடர்பாக காவல் நிலையம் சென்று புகார் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.
2. சம்பவம் நடைபெற்ற தேதியில் எங்கள் ஊரில் கோவில் கொடை நடைபெற்றது என்றால் சரிதான்.
3. சம்பவத்தின் போது இரத்த கறை படிந்த ஆடைகளை போலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்றால் ஆம் ஒப்படைத்துள்ளேன்.

4. நடந்த சம்பவத்தின் போது எதிரிகள் என்ன வகையான கட்டை என்று குறிப்பிட்டு புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

5. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் கோவில் கொடை என்பதால் ஜன நடமாட்டம் அதிகமாக இருக்கும் என்றால் சரிதான்.

6. சம்பவத்தில் தாக்கப்பட்ட பிறகு என்னை யார் மருத்துவமனைக்கு எந்த வாகனத்தில் அழைத்து சென்றார்கள் என்றால் என் மாமா ஜனகர் ஆட்டோவில் ஏற்றி சென்றார்.

7. நடந்த பிரச்சனையில் நான் 1ம் எதிரியை தாக்கியதாக காவல் நிலையத்தில் என் மீது 1ம் எதிரி புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

8. நடந்த சம்பவம் என்பது 1ம் எதிரியின் திருமணத்தை பற்றி கேலி செய்ததால் ஏற்பட்ட தகராறு என்றால் சரிதான்.

9. அதே போல் சிகிச்சைக்கு நான் சேர்ந்த போது 5 நபர்கள் என்னை தாக்கியதாக விபத்து பதிவேட்டில் மருத்துவரால் நான் சொல்லியதாக குறிப்புகள் செய்யபடுகிறது என்றால் சரிதான்.

10. புகாரில் எந்த கோவில் கொடைவிழா நடந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

11. அசா 2,3,4 ஆகியோர் எனக்கு என்ன உறவு முறை என்று கேட்டால் முறையே என் அப்பா, அம்மா, சித்தி ஆவார்கள்.

12. போலீசார்கள் சம்பவம் நடந்தவுடன் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்று கேட்டால் சம்பவம் நடந்த மறுநாள் காலை மருத்துமனையில் வைத்து விசாரித்தார்கள்.

13. போலீசார் விசாரணையின் போது போலீசார் கைபட எழுதி என்னிடம் படித்து காண்பித்து கையொப்பம் வாங்கினார்கள்.

14. எனக்கும் எதிரிக்கும் முன்பகை இருந்ததால் 1ம் எதிரியை பழிவாங்கும் நோக்கத்தில் கோவில் திருவிழாவின் போது எனக்கு ஏற்பட்ட காயத்தை வைத்துக் கொண்டு 1ம் எதிரி தாக்கியதால் இந்த காயம் ஏற்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொன்னேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.